**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.119/2019**

2025 –ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 07 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 07.08.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பூபதி (PW–2) | வயது | : | 46/2025 |
| த/க. பெயர் | : | திரு. ஆறுமுகம் | தொழில் | : | டிஜிட்டல் மார்க்கெட்டிங் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | | மன்னார்குடி |

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரப்பட்டதன் பேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேனா என்றால் இல்லை. நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் டிஜிட்டல் மார்க்கெட்டிங் வேலை பார்க்கிறேன். நான் குடியிருக்கும் செல்வானந்த நகரில் எத்தனை வருடம் தங்கி உள்ளேன் என்றால் 30 வருடமாக தங்கியுள்ளேன், எனக்கு சொந்த வீடு என்றால் சரிதான். கதவிலக்கம் என்னவென்றால் 116/2021 ஆகும். நான் வசிப்பது செல்வானந்த நகரில் பூங்காவிற்று கிழக்கு பக்கம் உள்ள ரோட்டிற்கு அடுத்தது எனது வீடு உள்ளது என்றால் சரிதான்.
2) செல்வானந்த நகர் என்பது நகராட்சியால் அங்கிகரிக்கப்பட்ட மனை பிரிவு என்றால் சரிதான். மனை பிரிவு சம்மந்தப்பட்ட விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனை பிரிவு போடும்போது அந்த மனையில் உரிமையாளர் பூங்கா, சாலை மற்றும் அரசு அலுவலகங்கள் வருவதற்கான இடங்களை அரசாங்கத்திற்கு ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். மீதமுள்ள இடங்களை யார் கிரயம் வாங்குவார்களோ அவர்களுக்கு தனித்தனியாக மனை விற்பனை செய்யப்படும் என்றால் சரிதான்.
3) செல்வானந்த நகரினை உருவாக்கியவர் ராகவாச்சாரியார் என்றால் சரிதான். பூங்கா, சாலை மற்றும் அரசு அலுவலகங்கள் வருவதற்கான இடங்களை அரசாங்கத்திற்கு ராகவாச்சாரியார் ஒப்படைத்தார் என்றால் இல்லை. பாலம்மாள் கணேசன் விற்பனை செய்த வீட்டு மனைகளில் பூங்கா, சாலை

மற்றும் அரசு அலுவலகங்கள் வருவதற்கான இடங்களை அரசாங்கத்திற்கு ஒப்படைத்தார்.

4) பூங்கா, சாலை மற்றும் அரசு அலுவலகங்கள் வருவதற்கான இடத்திற்கு பாலம்மாள் கணேசன் தான் உரிமையாளராக இருந்தார் என்றால் சரிதான். பூங்கா, சாலை மற்றும் அரசு அலுவலகங்கள் வருவதற்கான இடங்களை அரசாங்கத்திற்கு ஒப்படைத்த பின்னர் அந்த இடங்கள் அனைத்தும் நகராட்சியின் கட்டுப்பாட்டிற்கு வந்துவிட்டது என்றால் சரிதான். அதன்அடிப்படையில் மன்னார்குடி நகராட்சி செல்வானந்த நகரில் ரோடு போட்டு பராமரிக்கும் பணி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான், பூங்காவில் பராமரிக்கவில்லை.

5) பூங்கா, சாலை மற்றும் அரசு அலுவலகங்கள் வருவதற்கான இடங்களை அரசாங்கத்திற்கு ஒப்படைத்த இடங்களுக்கு நகராட்சி உரிமையாளர் என்பதால் அந்த இடத்தில் தொடர்பான முடிவுகளை நகராட்சிதான் எடுக்கவேண்டும் என்றால் சரிதான். 3ம் தரப்பினர்கள் அதை ஆட்சேபிக்க முடியாது என்றால் சரிதான். பூங்காவிற்கு மேற்கில் ராகவாச்சாரியாருக்கு சொந்தமான மனை பிரிவு உள்ளது என்றால் சரிதான். அந்த இடங்களும் விற்பனை செய்யப்பட்டு தற்போது வீடுகள் உள்ளது என்றால் சரிதான்.

6) அந்த மனை பிரிவிற்கு செல்ல செல்வானந்த நகரில் பூங்கா வழியாக செல்ல முடியும் என்றால் அந்த இடத்திற்கு செல்ல பிராதான சாலை உள்ளது. பூங்காவை ஒட்டி வடபுறம் நகராட்சியால் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை. பூங்காவிற்கு மேற்கிலுள்ள மனை பிரிவில் வீடு கட்டுவதற்காக செங்கல், ஜல்லி போன்றவை அந்த வழியாக தான் கொண்டு செல்வார்கள் என்றால் இரண்டு வழிகளிலும் செல்வார்கள்.

7) பூங்காவின் வடபுறம் பகுதியாக நகராட்சி சாலை அமைத்ததால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1ம் வாதி என்ன சாட்சி சொன்னார், என்ன ஆவணங்கள் தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நாராயணன் ராகவாச்சாரியின் வாரிசுகளில் ஒருவர் என்றால் சரிதான். மனை பிரிவு மாற்றம் தொடர்பாக நகராட்சியிலும், DTCP நகர அமைப்பு இயக்குநர் அலுவலகத்திலும் என்ன முடிவு எடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அது தொடர்பான ஆவணங்களை 1ம் பிரதிவாதி தரப்பில் இந்நீதிமன்றத்தில் குறியீடு செய்துள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

8) பூங்காவிற்கு வடபுறம் உள்ள சாலையானது நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக நகர இயக்குநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டு 2ம் பிரதிவாதியால் சாலை அமைக்கப்பட்டுள்ளது என்றும் அதை மறுத்தால் பணம் கிடைக்கும் என்ற எண்ணத்தில் 1ம் பிரதிவாதியிடம் பணம் கேட்டு அதை கொடுக்க மறுத்தால் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதிகள் கேட்கின்ற பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1ம் வாதியானவர் எனது வீட்டிற்கு பக்கத்தில் உள்ளவர்கள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி தரப்பின் குறுக்கு விசாரணையை 2ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக சொல்லப்பட்டது.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.11 10:42:01 +0530

District Munsif
Mannargudi.